**அக்டோபர் – 16**

# TNPSC துளிகள்

- M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF) உருவாக்கிய மீனவர்களுக்கு உகந்த கைபேசி செயலி, அபுதாபியில் நடைபெற்ற IUCN உலக வளங்காப்பு மாநாட்டில் Tech4Nature விருதை வென்றது.
- குஜராத்தின் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழுவான சித்தி என்ற சமூகத்தினர் 72 சதவீதத்திற்கும் மிக அதிகமான கல்வியறிவு விகிதத்தை அடைந்துள்ளனர்
- இந்தியா புது டெல்லியில் ஐக்கிய நாடுகளின் படைப் பிரிவுகளுக்கான பங்களிப்பு நாடுகளின் (UNTCC) தலைவர்கள் மாநாட்டை நடத்துகிறது.
- மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிகளில் புதிய மைல் கல்லை எட்டியதன் மூலம், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் 50 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை ஜஸ்பிரித் பும்ரா பெற்றார்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது மும்பையில் கோல்டன் ஸ்வீப் நடவடிக்கை என்ற தங்கக் கடத்தல் வழக்கில் 13 பேரைக் கைது செய்தது.
- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஆஸ்திரேலியாவின் பெர்த் என்னுமிடத்தில் நான்காவது AUSTRAHIND 2025 பயிற்சியை நடத்துகின்றன.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

### 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ரத்து




- 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான 11 ஆம் வகுப்பு பொதுத் தேர்வை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.
- 2017–2018 ஆம் ஆண்டிற்கு முந்தைய மதிப்பீட்டு முறையை மாணவர்கள் பின்பற்றுவார்கள் என்று அரசு உத்தரவு கூறுகிறது.
- முதலில், பொதுவான பாடத்திட்டப் பரவலை உறுதி செய்வதற்காக 11 ஆம் வகுப்பு வாரியத் தேர்வுகள் 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன.

## அரண் இல்லம்

- 'அரண் இல்லம்' என்ற திருநங்கைகளுக்கான தங்கும் இல்லங்களை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- முதல் கட்டத்தில் சென்னை ஷெனாய் நகரிலும், மற்றொன்று மதுரை அண்ணா நகரிலும் என இரண்டு தங்கும் இல்லங்கள் திறக்கப்பட்டன.
- மாநில திருநங்கை நல வாரியத்தின் அடையாள அட்டையுடன் 18 வயதிற்கு மேற்பட்ட திருநங்கைகள் இங்கு தங்குவதற்கான தகுதியுடையவர்கள் ஆவர்.
- இங்கு தங்குவதற்கான காலம் ஆனது அவர்களின் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் ஒரு மாதம் முதல் மூன்று ஆண்டுகள் வரை இருக்கும்.
- இந்த இல்லங்கள் ஆலோசனை வழங்கல், கல்வி, இலவச சட்ட உதவி மற்றும் குடும்பங்களுடன் மறு ஒருங்கிணைப்புக்கான ஆதரவை வழங்குகின்றன.




# தேசியச் செய்திகள்

## சுகம்ய பாரத் செயலி





- மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான அணுகலை

மேம்படுத்துவதற்காக அரசாங்கமானது புதுப்பிக்கப்பட்ட சுகம்ய பாரத் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

- புதிய அம்சங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான நிகழ்நேர உதவி மற்றும் அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்புக்காக செயற்கை நுண்ணறிவில் இயங்கும் உரையாடு மென்பொருள் ஆகியவை அடங்கும்.
- இந்தச் செயலியானது முதலில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தினால் 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது பொது உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைப்புகளில் அணுகல் சார்ந்த சிக்கல்கள் குறித்து புகாரளிக்கப் பயனர்களை அனுமதிக்கிறது.

## பருப்பு வகைகளுக்கான திட்டம் 2025




- 11,440 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பருப்பு வகைகளில் தன்னிறைவு அடைவதற்கான (ஆத்மநிர்பாரத்) திட்டத்தினை (2025–26 முதல் 2030–31 ஆம் ஆண்டு வரை) பிரதமர் தொடங்கி வைத்தார்.
- 2030–31 ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டு பருப்பு உற்பத்தியை 350 லட்சம் டன்களாகவும், பருப்புகளின் சாகுபடிப் பரப்பளவை 310 லட்சம் ஹெக்டேராகவும் விரிவுபடுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- நான்கு ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) துவரம் பருப்பு (அர்ஹார்), உளுந்து மற்றும் மசூர் பருப்பு வகைகளை 100 சதவீதம் கொள்முதல் செய்வதை இது உறுதி செய்கிறது.
- விவசாயிகளுக்கு 88 லட்சம் இலவச விதை தொகுப்புகள் மற்றும் 126 லட்சம் குவிண்டால் அளவிலான சான்றளிக்கப்பட்ட விதைகளை விநியோகிக்க அரசாங்கம்

திட்டமிட்டுள்ளது.

### சிறப்பு நோக்க நிதி - ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்கத் திட்டம்




- அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் (ANRF) நிர்வாகக் குழுவானது வழிகாட்டுதல்களையும் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க (RDI) திட்டத்திற்கான சிறப்பு நோக்க நிதியையும் அங்கீகரித்துள்ளது.
- RDI திட்டத்தில், 2025 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) கீழ் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த 1 லட்சம் கோடி ரூபாய் நிதி அடங்கும்.
- நிதியளிப்பானது இரண்டு நிலைகளில் கட்டமைக்கப்பட்டுள்ளது:
    - ANRF அறக்கட்டளையின் கீழ் சிறப்பு நோக்க நிதி, மற்றும்
    - மாற்று முதலீட்டு நிதிகள், மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் மற்றும் கவனம் செலுத்தும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற இரண்டாம் நிலை நிதி மேலாண்மை அமைப்புகள்.
- தொழில்நுட்பத் தயார்நிலை நிலைகள் 4 மற்றும் அதற்கு மேற்பட்டவற்றில் மாறுதல் மிக்க ஆராய்ச்சிக்கான திட்டச் செலவினங்களில் 50% வரையில் இந்தத் திட்டம் நிதியளிக்கிறது என்பதோடு இதில் மானியங்கள் மற்றும் குறுகிய காலக் கடன்கள் விலக்கப் பட்டுள்ளன.

## சர்வதேசச் செய்திகள்

### காசா அமைதி உச்சி மாநாடு 2025

- காசா அமைதி உச்சி மாநாடு எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக்கில் நடைபெற்றது.
- இது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் எகிப்திய அதிபர் அப்தெல் ஃபத்தா அல்-சிசி ஆகியோரால் இணைந்து நடத்தப்பட்டது.
- எஞ்சியுள்ள அனைத்து பணயக்கைதிகளை விடுவித்ததையும் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பிற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தையும் தொடர்ந்து உச்சி மாநாடு நடைபெற்றது.
- மத்தியக் கிழக்கில் பிராந்திய அமைதி மற்றும் நிலைத் தன்மைக்கான முயற்சிகளை வலுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.





## உலகின் முதல் நேரடி கடலடி நேர்காணல்




- பசிபிக் தீவு நாடான பலாவ், உலகின் முதல் நேரடி கடலடி நேர்காணலை நடத்தியது.
- பலாவ்வின் அதிபர் சுராங்கல் விப்ஸ் ஜூனியர், எஸ்டோனிய ஒலிம்பிக் நீச்சல் வீரரும் ஆர்வலருமான மெர்லே லீவாண்டுடன் நேர்காணல் செய்தார்.
- இந்த நேர்காணலில், கடலுக்கடியில் ஒளியைப் பயன்படுத்தி ஒலியை கடத்துகின்ற LiFi (ஒளி மெய்நிலை) வழி Talking Mask தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.
- பலாவ் என்பது பிலிப்பைன்ஸின் கிழக்கே அமைந்துள்ள சுமார் 340 தீவுகளைக் கொண்ட ஒரு தீவுக்கூட்டமாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ஒருங்கிணைந்த சந்தைகள் இடைமுகம்




- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, நிதி சார் சொத்துக்களைக் குறியாக்கம் செய்வதற்காக ஒருங்கிணைந்த சந்தைகள் இடைமுகத்தை (UMI) அறிமுகப் படுத்தி உள்ளது.
- UMI ஆனது, மொத்த மத்திய வங்கி டிஜிட்டல் நாணயம் (CBDC) மற்றும் சொத்துக் குறியாக்கத்திற்கு தொடர் சங்கிலித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- குறியாக்கம் ஆனது டிஜிட்டல் குறியீடுகள் மூலம் நிஜ உலகச் சொத்துக்களின் பகுதி உரிமம் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தினை அனுமதிக்கிறது.
- RBI வங்கி, டிஜிட்டல் கட்டணங்களை மேம்படுத்துவதற்காக செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான UPI HELP, UPI உடன் கூடிய IoT கொடுப்பனவுகள், வங்கி இணைப்பு மற்றும் UPI ரிசர்வ் பே ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## நடுநிலையான அணு சார் கியூபிட் தொகுப்பு

- கால்டெக் நிறுவனமானது, 6,100 கியூபிட்களுடன் உலகின் மிகப்பெரிய நடுநிலையான அணு சார் கியூபிட் தொகுப்பினை உருவாக்கி, பிழைத் திருத்தம் மற்றும் பெரிய அளவிலான குவாண்டம் கணினி இயக்கத்தினை நோக்கி முன்னேறி வருகிறது.
- ஒரு கியூபிட் என்பது ஒரு வழக்கமான பிட் அலகுக்கான குவாண்டம் எதிரிணையாக செயல்படுகின்ற, குவாண்டம் தகவலின் அடிப்படை அலகு ஆகும்.
- கியூபிட் பற்றிய கருத்தை அமெரிக்க தத்துவார்த்த இயற்பியலாளர் பெஞ்சமின் ஷூமேக்கர் அறிமுகப்படுத்தினார்.
- கியூபிட்கள் எலக்ட்ரான்கள், ஃபோட்டான்கள், பிடிபட்ட அயனிகள், அணுக்கள் மற்றும் மீக்கடத்து சுற்றுகள் போன்ற குவாண்டம் துகள்களைப் பயன்படுத்திக் கட்டமைக்கப் படுகின்றன.




## மைத்ரி II




- அண்டார்டிகாவில் மைத்ரி II எனும் இந்தியாவின் நான்காவது ஆராய்ச்சி நிலையத்தினைக் கட்டமைக்க நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- கிழக்கு அண்டார்டிகாவில் அமைக்கப்பட உள்ள மைத்ரி II ஆனது 2029 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மைத்ரி II மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைச் சூழல்கள் மற்றும் இந்தியாவிற்கு தரவை அனுப்ப தானியங்கி அறிவியல் கருவிகளைக் கொண்டிருக்கும்.
- இந்தியாவின் இரண்டாவது அண்டார்டிக் ஆராய்ச்சி நிலையமான மைத்ரி 1988 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியாவின் முதல் அறிவியல் ஆராய்ச்சி நிலையமான தக்சின் கங்கோத்ரி 1990 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வட்ட வலை சிலந்தி

- இடுக்கி வனவிலங்கு சரணாலயத்தில் மழைக்காலக் கணக்கெடுப்பின் போது இந்தியாவில் முதல் முறையாக வட்ட வலை/அரேனியஸ் நாக்ஸ் என்ற சிலந்தி இனம் தென்பட்டது.
- இந்த இனமானது, முன்னர் பிலிப்பைன்ஸ், மலேசியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட தென்கிழக்கு ஆசியாவில் மட்டுமே காணப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கட்டக் கணக்கெடுப்பின் போது 20 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 82 சிலந்தி இனங்கள் தென்பட்டன.




## பச்சைக் கடல் ஆமைகளின் வளங்காப்பு நிலை

- பல தசாப்தங்களாக உலகளாவிய வளங்காப்பு முயற்சிகளுக்குப் பிறகு IUCN அமைப்பானது பச்சைக் கடல் ஆமை/தோணியாமைகளின் (செலோனியா மைடாஸ்) வளங்காப்பு நிலையை அருகி வரும் இனம் என்ற நிலையில் இருந்து தீவாய்ப்புக் கவலை குறைந்த இனம் என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளது.
- சில துணை இனங்களுக்குத் தொடர்ந்து பல அச்சுறுத்தல்கள் இருந்த போதிலும், 1970 ஆம் ஆண்டுகளில் இருந்து உலகளாவிய பச்சை ஆமைகளின் எண்ணிக்கை கிட்டத் தட்ட 28% அதிகரித்துள்ளது.
- கூடு கட்டும் பெண் விலங்குகள் மற்றும் அவற்றின் முட்டைகளைப் பாதுகாத்தல், மீன் பிடி சாதனங்களில் ஆமை விலக்கு சாதனங்களைப் பயன்படுத்துதல் மற்றும் நீடித்த வர்த்தகத்தைக் குறைத்தல் ஆகியவை வளங்காப்பின் வெற்றிகளில் அடங்கும்.
- சில துணை இனங்கள் ஆனது வணிகத்திற்கு முந்தைய நிலைகளை நெருங்கி வருவதுடன் பிரேசில், மெக்ஸிகோ மற்றும் ஹவாய் ஆகிய இடங்களில் பெரிய அளவிலான மீட்பு நிலைகள் பதிவாகியுள்ளன.
- ஆஸ்திரேலியாவில் உள்ள ரெய்ன் தீவு உட்பட தென்மேற்கு பசிபிக் பகுதியின் துணை இனங்களில், சமீபத்திய ஆண்டுகளில் குஞ்சு பொரிக்கும் இனங்களின் உற்பத்தி

குறைந்து வருவதைக் காட்டுகிறது.




## IUCN உலக பாரம்பரியக் கண்ணோட்ட அறிக்கை 2025

- IUCN அமைப்பின் 4வது உலக பாரம்பரியக் கண்ணோட்ட அறிக்கையானது அபுதாபியில் உள்ள IUCN உலக வளங்காப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையானது, இயற்கை மற்றும் கலப்பு யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் களங்களின் பாதுகாப்பு நிலையை ஒவ்வொரு 3 முதல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடும் சர்வதேச இயற்கை வளங்காப்பு ஒன்றியத்தின் உலகளாவிய மதிப்பீடு ஆகும்.
- 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட இயற்கை பாரம்பரியக் களங்கள் பவளப்பாறை வெளிர்தல், பனிப்பாறை உருகுதல் மற்றும் காட்டுத்தீ போன்ற நேரடி பருவநிலை அபாயங்களை எதிர்கொள்கின்றன.
- உலகளாவிய நிலப்பரப்பு கார்பனில் தோராயமாக 10% ஆனது, இயற்கை உலகப் பாரம்பரியத் தளங்களில் சேமிக்கப்படுகிறது என்பதோடு இது பருவநிலை மீதான ஒழுங்குமுறையை ஆதரிக்கிறது.
- மோதல், மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் பலவீனம் காரணமாக 15 தளங்கள் "ஆபத்தில் உள்ள உலகப் பாரம்பரியத் தளங்கள்" பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டன.
- இந்தியாவில், உலகளாவிய இயற்கைப் பாரம்பரியப் பகுதியில் 1.5 சதவீதத்திற்கும் அதிகமான பகுதியை உள்ளடக்கிய 7 இயற்கை மற்றும் கலப்பு உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- அதிகரித்து வரும் உப்புத் தன்மை, புயல்கள் மற்றும் கடல் மட்ட உயர்வு காரணமாக சுந்தரவனக்காடுகள் சதுப்புநிலச் சரிவை எதிர்கொள்கின்றன என்பதோடு இது பல்லுயிர் மற்றும் பாதுகாப்புச் சேவைகளைப் பாதிக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகள் சுரங்கம், கட்டுமானம் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களால் நெருக்கடியில் உள்ளன என்ற நிலையில் இது சுற்றுச்சூழல் சம நிலையை அச்சுறுத்துகிறது.
- நந்தா தேவி மற்றும் இமயமலை தேசியப் பூங்கா ஆகியவை பனிப்பாறை இழப்பு

மற்றும் ஊடுருவல்/ஆக்கிரமிப்பு இனங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன.




## ஆர்மேனியா - IUCN உறுப்பினர்




- ஆர்மேனியா நாடானது, அபுதாபியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு IUCN உலக வளங் காப்பு மாநாட்டின் போது IUCN அமைப்பின் புதிய உறுப்பினராக ஆனது.
- இந்த நாட்டில் பனிநிலைப் புல்வெளிகள், மலைக் காடுகள், பகுதியளவு பாலைவனங்கள் மற்றும் நன்னீர் சுற்றுச்சூழல் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு வாழ்விடங்கள் உள்ளன.
- ஆர்மேனியாவில் உள்ள அரிய இனங்களில் மிகவும் அருகி வரும் காகசியன் சிறுத்தை, உள்ளூர் போயர்/பெசோவர் ஆடு மற்றும் செவன் ட்ரௌட் ஏரியில் மட்டுமே காணப்படும் செவன் ட்ரௌட் மீன் ஆகியவை அடங்கும்.
- ஆர்மேனியா நாடானது, 2030 ஆம் ஆண்டிற்குள் அதன் 12.9% நிலப்பரப்பில் காடுகளை

மீட்டெடுக்கவும், இயற்கை சார்ந்த தீர்வுகளைத் தேசிய கொள்கைகளில் ஒருங்கிணைக்கவும் இலக்கு நிர்ணயித்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## IUCN அறிக்கை 2025




- சுற்றுச்சூழல் இணைப்பு மற்றும் நில மறுசீரமைப்பு குறித்த உலகளாவிய நிலக் கண்ணோட்ட கருப்பொருள் சார் அறிக்கையானது அபுதாபியில் நடைபெற்ற IUCN உலக வளங்காப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இது பாலைவனமாக்கலை எதிர்ப்பதற்கான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை (UNCCD) மற்றும் புலம்பெயர்ந்த காட்டு விலங்குகளின் வளங்காப்பிற்கான உடன்படிக்கை (CMS) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.
- நிலம், நீர் மற்றும் உள்கட்டமைப்பு திட்டமிடலில் சுற்றுச்சூழல் இணைப்பைச் சேர்க்குமாறு உலக நாடுகளை இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.
- சுற்றுச்சூழல் இணைப்பு என்பது உயிரினங்களின் தடையற்ற நடமாட்டம், வாழ்விடங்களின் இணைப்பு மற்றும் பூமியில் உயிரினங்களின் வாழ்வினை நிலை நிறுத்தும் இயற்கைச் செயல்முறைகளின் இயக்கம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சர்வதேச வனச்சரகர் விருதுகள் 2025



- வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்பில் அவர்களின் சேவைக்காக 13 வனச்சரகர் மற்றும் வனச்சரகர் அணிகள் ஆனது 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச வனச்சரகர் விருதுகளைப் பெற்றன.
- இந்த விருதுகளை IUCN அமைப்பின் உலகப் பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் ஆணையம் வழங்கியது.
- உக்ரைன் மற்றும் புர்கினா பாசோ உட்பட 13 நாடுகளைச் சேர்ந்த வனச்சரகர்கள் 5,000 அமெரிக்க டாலர் முதல் 25,000 அமெரிக்க டாலர் வரையிலான பரிசுகளை / மானியங்களைப் பெற்றனர்.
- உலகளாவியப் பல்லுயிர்ப் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் வனச்சரகர்களின் முக்கியப் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த விருதுகளின் நோக்கமாகும்.

## IUCN கென்டன் மில்லர் விருது 2025




- காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தின் இயக்குனர் சோனாலி கோஷ் கென்டன் R. மில்லர் விருதைப் பெற்றார்.
- தேசியப் பூங்காக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் நிலைத் தன்மையில் புதுமைக்காக இந்த சர்வதேச விருதை வென்ற முதல் இந்தியர் இவர் ஆவார்.
- IUCN அமைப்பின் ஒரு பகுதியாக உள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகள் ஆணையம் (WCPA) ஆனது இந்த விருதை வழங்கியது.
- கென்டன் R. மில்லர் விருது ஆனது, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் திட்டமிடல், மேலாண்மை, நிர்வாகம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் புதுமைகளை அங்கீகரிக்கிறது.

# இதரச் செய்திகள்

## டூரண்ட் எல்லை மோதல் 2025

- ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் நாடுகளின் எல்லையான டூரண்ட் எல்லையில் மிகக் கடுமையான மோதல்கள் நடைபெற்றன.
- குனார் மற்றும் ஹெல்மண்ட் மாகாணங்களில் பல பாகிஸ்தான் ராணுவப் புறக்காவல் நிலையங்களை ஆப்கானியப் படைகள் கைப்பற்றின.
- டோர்காம் மற்றும் சாமன் உள்ளிட்ட முக்கிய எல்லைக் கடப்புகளைப் பாகிஸ்தான் தடுத்து, இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை நிறுத்தியது.
- இது 1893 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் எமிரேட் மற்றும் பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுக்கு இடையிலான சர்வதேச எல்லையாக நிறுவப்பட்டது.




## உலகின் முதல் மெய்நிகர் அருங்காட்சியகம்



- திருடப்பட்ட கலாச்சாரப் பொருட்களின் உலகின் முதல் மெய்நிகர் அருங் காட்சியகத்தினை யுனெஸ்கோ தொடங்கியுள்ளது.
- இது 46 நாடுகளில் காணாமல் போன சுமார் 240 கலைப்பொருட்களைக் காட்சிப் படுத்துகிறது.

- இந்தத் தளம் ஆனது MONDIACULT எனப்படும் கலாச்சாரக் கொள்கைகள் மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான உலக மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- கலைப் பொருட்கள் நேரடியாக மீட்கப்பட்டு திருப்பி அனுப்பப் படுவதால், மெய்நிகர் அருங்காட்சியகம் ஆனது தானாக வெறுமையாகும் வகையில் வடிவமைக்கப் பட்டு உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★